# ஒன்ராறியோவின் கல்வி Equity (ஒவ்வொரு மாணவரினதும் திறனுக்கேற்பக் கற்பித்தல்) செயல் திட்டத்தை விளங்கிக்கொள்ளல்:

# பெற்றோருக்கான தகவல் திரட்டு

*உன்னதத்தை அடைதல் (Achieving Excellence):* என்பதில் சொல்லப்பட்டிருப்பது போல equity ஐ உறுதிப்படுத்துவது, அரசினால் நிதியளிக்கப்படும் ஒன்ராறியோவின் கற்பித்தல் அமைப்பின் முக்கிய இலக்காக இருக்கின்றது




*A Renewed Vision for Education in Ontario (ஒன்ராறியோவில் கற்றல்&கற்பித்தல் பற்றிய பரிசீலிக்கப்பட்ட தொலைநோக்கு* (2014).

பின்புலம், அடையாளம் அல்லது தனிப்பட்ட சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும், தனிப்பட்ட முறையிலும், கல்விரீதியாகவும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் ஒவ்வொரு மாணவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து இது உருவாகின்றது.

உன்னதத்தை அடைதல் முதல் நல்வாழ்வை ஊக்கப்படுத்தல் மற்றும் எங்களுடைய கல்வி அமைப்பில் பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்தல் வரை அமைச்சின் கற்றல் & கற்பித்தல் பற்றிய தொலைநோக்குடன் தொடர்பான அனைத்துக் கூறுகளுடனும் Equity தொடர்புபட்டுள்ளது.

இது மாணவ அனுபவத்தின் முக்கியமானதொரு கூறாகவும், ஒன்ராறியோவிலுள்ள ஒவ்வொரு மாணவரினதும் வெற்றிக்கான ஒப்புக்கொண்ட எங்களுடைய கடமைப்பாட்டின் அடிப்படையாகவும் உள்ளது.

## Equity கற்றல் & கற்பித்தல் செயல் திட்டம்

**ஒன்ராறியோவின் Equity கற்றல் & கற்பித்தல் செயல் திட்டம்** பாகுபாட்டு நடைமுறைகள், அமைப்பு ரீதியான தடைகள் மற்றும் பக்கச்சார்புகளை இனம் காணவும் அவற்றைப் பாடசாலைகள் மற்றும் வகுப்பறைகளில் இருந்து அகற்றவும் ஒரு வழிசமைக்கின்றது.

அனைத்து மாணவர்களினதும் அடைவுகள் மற்றும் நல்வாழ்வுக்குச் சிறப்பாக ஆதரவளிப்பதற்கு இந்தத் திட்டம் அமைச்சினை அனுமதிக்கும். சில முக்கிய நடவடிக்கைகள் உள்ளடக்குபவை: கலாச்சாரரீதியாக எதிர்வினையாற்றக்கூடிய பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் நடைமுறைகளை உறுதிப்படுத்துதல், பெற்றோர் ஈடுபாட்டுக் குழுக்கள் (PICs) மற்றும் பாடசாலை கவுன்சில்களில் பங்கேற்பதற்குப் பல்வேறு சமூகத்தினரை உற்சாகப்படுத்துவதற்கும், ஆசிரியத் தொழிலை ஊக்குவிப்பதற்கும் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத குழுக்களுக்குள்ள தடைகளை நீக்குவதற்குமான வழிகளை அடையாளம் காணல்.

அமைச்சின் 2009 Equity மற்றும் உள்ளடக்கும் கற்றல்&கற்பித்தல் உத்தியிலிருந்து கட்டியெழுப்பப் படும், 2017-18 கல்வி ஆண்டுடன் ஆரம்பமாகின்ற இந்த மூன்று வருடத் திட்டம், செயற்திட்டத்தை யதார்த்தமாக்குவதற்காக மாணவர்கள், பெற்றோர், பயிற்றுநர்கள், அதிபர்கள், சபைப் பணியாளர்கள் மற்றும் சமூகத்தின் தலைவர்களை சம்பந்தப்படுத்துகின்றது. ஒன்ராறியோப் பாடசாலைகளிலுள்ள கற்கும் சூழலை, ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு மாணவரும் தங்களுடைய முழுமையான திறனை அடைவதுடன் தனிப்பட்ட முறையில் வெற்றிகரமான, பொருளாதாரரீதியாக வினைத்திறனான மற்றும் தீவிர ஈடுபாடுள்ள குடிமக்களாக மாறுவதைத் தூண்டும் ஒரு சூழலாகத் தொடர்ந்தும் நாங்கள் இணைந்து கட்டியமைக்க முடியும்.

இந்தச் செயல் திட்டத்தில் வரையறை செய்த இலக்குகளை விளங்கிக்கொள்வதற்காக, கல்வி அமைச்சு **Education Equity Secretariat (கல்விச் செயலகத்தை)** உருவாக்கியுள்ளது. புதிய கொள்கைகள், ஆதாரவளங்கள் மற்றும் அனைத்து மாணவர்களுக்கும் உதவக்கூடிய திட்டத் தெரிவுகள் மூலமும், யதார்த்தமான இலக்குகள் ஊடாகவும், ஒன்ராறியோ மாணவர்களின் அடைவுகளில் உள்ள வேறுபாடுகளைத் தீர்க்க முயற்சிப்பதற்கும்,

இடைவெளிகளுக்குப் பாலம் அமைப்பதற்குமாக இந்தச் செயலகம் செயலாற்றும்.

குறைந்தளவு எண்ணிக்கையான தெளிவான செயல்களில் நாங்கள் கவனம் செலுத்துகையில், எங்களது குறிக்கோள்களை அடைவதில் எங்களுக்கு வெற்றி அதிகமாக இருக்கின்றது என்பதுடன் எங்களின் செயலின் விளைவை நாங்கள் சிறப்பாகக் கண்காணிக்கக் கூடியதாக இருப்பதையும் அனுபவங்கள் எங்களுக்குக் காட்டுகின்றன. கல்வி அமைப்பிலுள்ள சமத்துவமின்மைகளைத் தொடர்ச்சியாக எதிர்ப்பதற்கு எங்களுக்கு உதவும் குறித்த செயல்களுடனான நான்கு பகுதிகளை ஒன்ராறியோவின் கல்வி Equity செயல் திட்டம் கொண்டுள்ளது – அனைத்தும் மாணவர் நல்வாழ்வு மற்றும் அடைவை மேம்படுத்துவதற்கான இலக்குகளைக் கொண்டுள்ளன.

## திட்டத்தின் செயல்பாட்டுப் பகுதிகள்:

- பாடசாலை மற்றும் வகுப்பறை நடைமுறைகள் –. அனைத்து மாணவர்களினதும் தேவைகளையும் யதார்த்தங்களையும் பிரதிபலப்பதற்காக, பாடசாலை மற்றும் வகுப்பறை நடைமுறைகள், அனைத்து மாணவர்களினதும் பணியாளர்களினதும் பன்முகத்தன்மையைப் பிரதிபலிப்பதுடன், எதிர்வினையாற்றுவதை உறுதிப்படுத்தல் அதிகளவான மாணவர்கள் தாங்கள் தெரிவுசெய்த தொழில், கல்லூரி, தொழிற்பயிற்சி அல்லது பல்கலைக்கழகங்களை அடைவதற்காகவும் அவற்றுக்கான பாதைகளைத் தொடர்வதற்காகவும், எங்களுடைய அமைப்பிலுள்ள அமைப்புரீதியான தடைகளைப் பரிசோதிப்பதற்கும் அவற்றைத் தீர்ப்பதற்குமாக கற்பித்தல் பங்காளிகள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் சமூகத்தவர்களுடன் பணிபுரிதல் இதை அடைவதற்கான ஒரு வழியாகும்.
- தலைமைத்துவம், அதிகாரம் மற்றும் மனித வள நடைமுறைகள் – ஒன்ராறியோப் பாடசாலைப் பயிற்றுநர்கள், தலைவர்கள் மற்றும் அமைப்புத் தலைவர்களுக்கான ஆள்சேர்ப்பு, அவர்களைப் பணிக்கமர்த்தல் மற்றும் அவர்களின் பதவியுயர்வு மூலம், {1>அதன் ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் பாடசாலை அமைப்புத் தலைவர்களின் பன்முகத்தன்மை, அதன் மாணவர்களின் பன்முகத்தன்மையைப் பிரதிபலிப்பதை <1} உறுதிப்படுத்தல். Equity இலக்குகளை அடைவதில் அவர்களின் முன்னேற்றத்தைப் பற்றி வருடாந்த அறிக்கையைப் பயன்படுத்தி அறிக்கையிடும்படி மேலாளர்களை வேண்டுவது இதற்கு ஒரு உதாரணமாகும்.
- தரவுகள் சேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அறிக்கையிடல் – ஒன்ராறியோவின் மாணவர்கள், ஆசிரியர்கள் பற்றிய விபரத்தை குடியியல் தரவுகளைச் சேகரித்தலும் ஆய்வுசெய்தலும் வழங்கும். இது எங்களுடைய பாடசாலை மற்றும் அமைப்புத் தலைவர்கள் மாணவர்களின் வெற்றிக்கான தடைகளை மிகவும் துல்லியமாகத் தீர்ப்பதற்கு உதவிசெய்யும் தன்னார்வமாகச் சேகரிக்கப்படும் தரவுகள், குலம் மற்றும் இனத்தை மட்டுமன்றி, மதம், பாலியல் ஆர்வம் மற்றும் பாலின அடையாளத்தையும் உள்ளடக்கும்.
- கல்வித் துறை முழுவதும் தரவு சேகரிக்கப்படுவதையும் பாடசாலைச் சபைப் பகுப்பாய்வுக்கு ஆதரவு வழங்குவதையும் {2>செயல் திட்டம் <2}உறுதிப்படுத்தும். உள்ளூர் தீர்மானமெடுத்தலுக்குத் தரவு பயன்படுத்தப்படும்.
- அமைப்புரீதியான கலாச்சார மாற்றம் – நியாயமான மற்றும் உள்ளடக்கிய கல்வி முறையை ஆதரிக்கும் சுற்றுச்சூழல்களை உருவாக்குவதற்கும் ஆதரிப்பதற்கும் அமைப்புத் தலைவர்கள், பயிற்றுனர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் தொடர்ந்தும் உறுதியுடன் இருப்பதை உறுதிப்படுத்தல். அனைத்து ஒன்ராறியோ மாணவர்களும் உள்ளடக்கப்படுகிறனர், மதிக்கப்படுகின்றனர் மற்றும் வெற்றி பெறக்கூடிய நிலையில் உள்ளனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு, தேவையான ஒரு நிலையாக இது உள்ளது. இந்தப் பணியின் ஒரு பகுதி கல்வி அமைச்சின் அமைப்பு, கொள்கைகள், திட்டங்கள், நடைமுறைகள் ஆகியவற்றில் சமத்துவமின்மைகளை அடையாளம் காணல் மற்றும் தீர்வுகாணலை உள்ளடக்கும்.

## எதிர்காலத்தை நோக்கி:

பல ஆயிரக்கணக்கான புகழ்பெற்ற ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பங்களிப்பினால் இந்த equityக்கான ஒன்ராறியோவின் பாதை தொடர்ந்து ஆதரிக்கப்படும். நாங்கள் ஒன்றுசேர்ந்து பெரும் முன்னேற்றங்களை ஏற்படுத்துகின்ற அதேவேளையில், செய்வதற்கு மேலும் வேலைகள் இன்னும் இருக்கின்றன.

மாணவரின் அடைவுகளை, மாணவர் மற்றும் பணியாளர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும், அரச நிதியளிக்கப்பட்ட பாடசாலை அமைப்பில் நம்பிக்கையை ஊக்குவிக்கவும், equityஐ உறுதிப்படுத்தல் அவசியமான அத்திவாரமாக இருக்கின்றது. *உன்னதத்தை அடைதல்* என்பது கல்வியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி வெளியேறும் மாணவர்கள் ஈடுகொடுக்கக்கூடிய, அக்கறையுள்ள, நம்பிக்கைமிக்க மற்றும் திறனுள்ள குடிமக்களாகவும் இருப்பதற்கும் கல்வி அமைப்பை சவாலாக்கும் இலட்சியமுள்ள ஒரு தொலைநோக்காக உள்ளது.

அரச நிதியளிக்கப்பட்ட பாடசாலைகளில் equityக்கு கல்வி அமைச்சு எவ்வாறு பங்களிக்கிறது என்பது பற்றிய மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள்: **ontario.ca/educationequity**

ISBN 978-1-4868-0661-4 (PDF) ISBN 978-1-4868-0653-9 (Print) (Tamil) © Queen's Printer for Ontario, 2017